Registered as a NewsPaper

# ஈழநாதம்

Eelanatham
மக்கள் நாளிதழ்
பக்கங்கள் ~ iv


R/A: Nelsan Yasarathne
T.P: 024-23318
NELSON LEARNERS
(Government Approved "A" Grade Driving School)
Reg No: D.S.242
சிறிய வாகனம் முதல் பெரிய வாகனம் வரை பயிற்சிகொடுத்து லைசன்ஸ் கொடுக்கப்படும்.
கிளை: வவுனியா, யாழ்ப்பாணம்.
No:86, Bus Stand Complex Vavuniya.

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி - 23 | 08-08-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 171

# வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்த 10 இந்.மீனவரை உள்ளூர் மீனவர் பிடித்து வந்தனர்

## இரண்டு றோலர்கள் தடுத்து வைப்பு

(வடமராட்சி)

**வடமராட்சி இன்பருட்டி கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் பத்துப்பேர் நேற்று முன்தினம் நள்ளிரவு உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் இரண்டு றோலர்களும் உள்ளூர் மீனவர்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.**

வடமராட்சி இன்பருட்டி கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட இவர்களை உள்ளூர் மீனவர்கள் திரண்டு சென்று இரண்டு மீன்பிடி இழுவைப் படகுகள் சகிதம் இழுத்துக் கரைக்குக் கொண்டு வந்தனர். கரையோரப் பகுதியில் கண்காணிப்பில் இருந்த படையினருக்குத் தெரியாமல் உள்ளே தனியார் வீடொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் அக்கரைப்பற்று கிராமத்தைச் சேர்ந்த பழனியப்பன் செந்தில் (வயது-28) ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களான திருகோணம் அமிர்தவேல் (வயது-22), திருகோணம் பழனிவேல் (வயது-27),

(IV ஆம் பக்கம் பார்க்க..)



உள்ளூர் மீனவர்களால் பிடித்து வரப்பட்ட றோலர்கள்

### - இடைக்கால நிர்வாகம் தொடர்பான -

## திட்டவரைவிலுள்ள வேறுபாடுகள் பற்றி சனாதிபதி பிரதமர் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும், சனாதிபதிக்கும் அரசாங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதங்களில் காணப்படும் வித்தியாசங்கள் குறித்து சனாதிபதியும் பிரதமரும் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினர்.

சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையின் போது இரண்டு கடிதங்களிலும் காணப்படும் வித்தியா சங்களுக்கான காரணங்களை சனாதிபதியிடம் பிரதமர் விளக்கிக் கூறியுள்ளார் என சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள யோசனைகளுக்கு அவர்கள் பதிலளித்த பின்னர் அது தொடர்பாக சனாதிபதிக்கு எடுத்துக் கூறுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார்.

மேலும் விடுதலைப்புலிகளின் பதில் இம்மாத பிற்பகுதியில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக சனாதிபதி செயலக

(IV பக்கம் பார்க்க..)



பிடித்துவரப்பட்ட இந்திய மீனவர்களில் ஐவர்

## 10000 பேரை படையில் இணைக்கும் முதற்கட்ட நடவடிக்கை ஆரம்பம்

பத்தாயிரம் பேரை படையில் சேர்க்கும் சிறிலங்கா அரசின் ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் முதற்கட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 19ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. இக்காலப் பகுதியில் 4000 பேர் நிரந்தரப் படையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான நேர்முகப்பரீட்சைகள் இக்காலப் பகுதியில் அனைத்து இராணுவ முகாம்களிலும் பிரதேச செயலகங்களிலும் நடைபெறவுள்ளது.

இதேவேளை படையினருக்கு

(IV ஆம் பக்கம் பார்க்க..)

## அனுமதி முறை மாற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர்கள் துப்பாக்கிகளை வைத்திருப்பதற்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் முறையில் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளன. புதியதிட்டத்தின் படி குறிக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு மாத்திரமே அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்துக்கொண்டால் மாத்திரமே பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டரீதியான துப்பாக்கிகளை வைத்திருக்க அனுமதிக்கப்படுவார்கள் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியுள்ளார்.

## குரங்குப்பாஞ்சான் முகாம் குறித்து நோர்வே அரசுக்கு முறையிடுவோம்

### -கண்காணிப்புக்குழுப் பிரதித்தலைவர்

(திருகோணமலை)

குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பான தற்போதைய நிலை குறித்து சிறிலங்கா அரசாங்கத்திற்கு அறிவிக்க உள்ளதாக கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் ஹெறாக்லண்ட் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முகாமை விட்டு வெளியேறுவதற்கான காலக்கெடு முடிந்து விட்ட போதும் புலிகள் வெளியேறவில்லை. இது குறித்து நோர்வே அரசிற்கும் முறைப்பாடு செய்யவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசு-புலிகள் பேச்சுவார்த்தை அடுத்த மாத இறுதியில் ஆரம்பமாகும்

### -அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை

அடுத்த மாத இறுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமாதான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என்று அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப்புலிகளுடன் நடத்தி வந்த பேச்சுவார்த்தை அடுத்த மாத இறுதிக்குள் ஆரம்பமாகும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று

(IV ஆம் பக்கம் பார்க்க..)

### -சுன்னாகம் பகுதியில்-

## இராணுவத்தின் மிதிவெடி வெடித்து குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சுன்னாகம் பகுதியில் இராணுவத்தினர் புதைத்து வைத்த மிதிவெடி வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தில், தெல்லிப்பளையைச் சேர்ந்த கந்தசாமி(வயது-46) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

சுன்னாகம் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகாமையில்

(IV ஆம் பக்கம் பார்க்க..)

## அடுத்த தேர்தல் ஒன்று நடைபெறமுன் சு.க- ஜே.வி.பி.கூட்டணி ஏற்படுமாம்

### - சு.க.பொதுச் செயலாளர் தெரிவிப்பு

எதிர்காலங்களில் நடைபெறவுள்ள எந்தவொரு தேர்தலுக்கும் முன்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் கூட்டணி ஒன்று அமைக்கப்படும் என சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

மாகாண சபைத்தேர்தலுக்கே முதன் முதலில் முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அடுத்த வருடம் சில மாகாண சபைகளின் ஆயுட்காலம் நிறைவு பெறவுள்ளதாகவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டினார். குறிப்பிட்ட மாகாண சபைகளின் ஆயுட்காலம் நிறைவு பெற்றதும் அந்தச் சபைகள் கலைக்கப்படுமா என்று கேட்ட போது அது தொடர்பாக இன்னும் ஆராயப்பட

(IV ஆம் பக்கம் பார்க்க..)

## இடைக்கால நிர்வாகம் வேண்டாம் வெளிநாட்டுப்படைகளை அனுமதிக்காதீர்

### கோரி ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்

இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகளிடம் கையளிப்பதற்கு எதிராக நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் எதிர்ப்புக்கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் ஜே.வி.பி நடத்தியுள்ளது.

இந்தக் கூட்டங்களில் நாட்டை ரணில் அரசு இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை விடுதலைப்புலி

(IV ஆம் பக்கம் பார்க்க..)

### தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்ற

# அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும்

### பொது நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல்வாதிகளுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையில் புரிந்துணர்வுடன் பணியாற்றக்கூடிய உறவு மேலும் வலுப்பெற வேண்டுமென பொது நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சர் மயூரா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் பொதுமக்களுக்கு சிறந்த சேவையாற்றக் கூடிய வாய்ப்பு ஏற்படுமென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சி வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இதுவே சிறந்த வழி. இதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் போது அதற்கு அரச அதிகாரிகள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்ததாக பொது நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையிலும் இது கூறப்பட்டுள்ளது.

இதேவேளை அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றோருக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்கவும் அரசு தீர்மானித்துள்ளதாக அபயவர்த்தன சுட்டிக் காட்டியுள்ளார்.

## மேஜர் கைது

இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களைத் தாக்கிய இராணுவ மேஜர் ஒருவரையும், பொலிஸ் இன்ஸ்பெக்டரையும் பொலிசார் கைது செய்தனர். காலிமுகத்திடலில் மது போதையில் இருந்த இவர்களைத் தடுத்து நிறுத்திய இரண்டு பொலிசாரையும், இராணுவ மேஜரும், பொலிஸ் இன்ஸ்பெக்டரும் தாக்கினர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து இவர்கள் இருவரையும், வாகனச் சாரதியையும் கைது செய்து பொலிசார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

## வரிவிளம்பரம்


### N.E.C. கணினிப்பயிற்சி நிலையம்

மத்தியகல்லூரி முன்பாக பாடசாலை மாணவர்களுக்கான புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம். N.E.C கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 10% கழிவு உண்டு. காலம்: 15-08-2003 நேரம் 3.00 மணி (3614)

### N.E.C

A-9 கிளிநொச்சி

A/L மாணவர்களுக்கான பொது ஆங்கில வகுப்புக்கள்.

15-08-2003 ஆரம்பம். ஆசிரியர் திரு.ரஜிவன் (Dip.in.ENG)(3613)

### தமிழ்: ஆசிரியர் வசீகரன்

09-08-2003 சனி அன்று மு.ப 11.00 மணிக்கு G.A.Q 12.00 மணிக்கு B.A விசுவமடு கிஸ்ணாவில் நடைபெறும். பி.ப 1.00 G.A.Q 4.00 மணிக்கு B.A அன்றே 3.00 மணிக்கு A/L DAY ஆகியன (பொன்னம்பலம் அருகில்) விஞ்ஞானக்கல்வி நிலையத்திலும் நடைபெறும். ஆசிரியர். (3616)


## இலங்கை வங்கி முல்லைக்கிளை முல்லைத்தீவில் இருநாட்கள் மட்டுமே செயற்படும்

கடந்த 01-08-2003 அன்று முதல் முல்லைத்தீவில் இலங்கை வங்கிக்கிளை செயற்பட ஆரம்பித்துள்ளபோதும் தொடர்ந்து இயங்காததினால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இதுவிடயமாக வங்கி முகாமையாளரிடம் கேட்டபோது வங்கி தொடர்பான தொடர்புகள் சில சரியான முறையில் முல்லையில் வரவில்லை என்பதால் தாம் முழுமையாக இயங்க முடியவில்லையென்றும் வெகுவிரைவில் இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதாகவும் அதுவரையும் செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் மட்டும் முல்லைத்தீவில் வங்கி செயற்படும் எனவும் தெரிவித்தார்.

### மட்டு.வேலையற்ற பட்டதாரிகளின்

# பிரச்சினை ஒக்டோபரிற்குள் தீர்த்து வைக்கப்படும்

### பிரதமர் ரணில் உறுதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்கு இடையில் தீர்வு காணப்படும் என்றும் எனவே பட்டதாரிகள் ஒன்றியம் போராட்டங்களில் ஈடுபடாது ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆசிரிய நியமனங்கள் மற்றும் ஏனைய திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும்போது மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகளுக்கு இடமளிக்கப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிரதமரின் செயலகத்தில் தமிழர் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் மட்டு. வேலையற்ற பட்டதாரிகள் சங்க பிரதிநிதிகளும் பிரதமரைச் சந்தித்து மேற்படி உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

# இறந்த, காயமடைந்த இராணுவத்தினருக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

அடுத்த ஆறு மாதங்களுக்குள் இராணுவத்தினருக்கு 400 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு இரணவிருசேவா அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கிறது.

பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் இந்த வீடுகள் அமைக்கப்படும் . தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் 150 வீடுகளும் இராணுவத்தினருககு வழங்கப்படவுள்ளன.

இறந்த இராணுவத்தினரின் குடும்பத்தினருக்கும் சண்டையில் ஊனமடைந்த படையினருக்கும் இந்த வீடுகள் பெற்றுக் கொடுக்கப்படும் என்று அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

## பெற்றோல், டீசலுக்கு உற்பத்தி வரி அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோல், டீசலுக்கான வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் புதிய உற்பத்தி வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் கடந்த 31ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

அதன்படி பெற்றோலுக்கு அறவிடப்படும் 21 ரூபா வரி 22 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு லீற்றர் டீசலுக்கான வரி 50 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 3 ரூபாவாக இருந்த டீசல் உற்பத்தி வரி 3 ரூபா 50 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இந்த வரியதிகரிப்பு பெற்றோல், டீசலுக்கான விலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விமலசேன தெரிவித்துள்ளார்.

## துப்பாக்கி அபகரிப்பு

மணலாறு ராமகல காவல் அரணில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவரின் ரி-56 ரகத்துப்பாக்கி ஒன்று காணாமல் போயுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

சிங்க ரெஜிமன்டைச் சேர்ந்த குறிப்பிட்ட படைச்சிப்பாய் கடமையின் போது தூங்கிக் கொண்டிருந்தபோதே அவரிடமிருந்து துப்பாக்கி அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

## கிளி.இல் தமிழ் விழா சிறப்புற நடைபெற்றது

(அலுவலக செய்தியாளர்)

"தமிழன் தமிழால் நிமிர்வான்" என்னும் தொனிப்பொருளில் கிளி.வலயக் கல்விப் பணிமனையினரின் ஏற்பாட்டில் கிளி. மாவட்ட பாடசாலைகளின் தமிழ் விழா நடைபெற்றது. நேற்று முன்தினம் பி.ப 4.00 மணிக்கு கிளிநொச்சி முருகன் ஆலயத்தில் விசேட வழிபாடு இடம்பெற்றது.

அதனையடுத்து மங்கல வாத்தியத்துடன் மாணவிகள் குத்துவிளக்குகளை ஏந்தியவாறு முன் செல்ல அதனைத் தொடர்ந்து மாணவர்கள் ஏட்டுச்சுவடிகளை ஏந்தியவாறு செல்ல அதனைத் தொடர்ந்து கரகநாட்டியம், காவடிகள் பின்தொடர வலயக்கல்விப்பணிப்பாளர், பிரதி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஏ-9 பிரதான வீதிவழியாக ஊர்வலமாக கிளி. மத்திய கல்லூரியை வந்தடைந்ததும் அங்கு கிளி.வலயக்கல்விப் பணிப்பாளர் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மாகாண மட்டப் போட்டியில் கலந்து முதலாமிடத்தைப் பெற்ற மாணவ மாணவிகள், மற்றும் முன்பள்ளிச் சிறார்களின் நிகழ்வுகளும் இடம்பெற்றன. மேற்படி நிகழ்வில் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் அவர்கள் கலந்து வாழ்த்துரை வழங்கினார். (சோ)

## தாய்மொழியில் முன்னேறிய நாடுகளே அபிவிருத்தியடைந்தன

### மட்டு. அரச அதிபர்

(மட்டக்களப்பு)

தாய்மொழியில் முன்னேறிய நாடுகள் தான் அபிவிருத்தியடைந்த நாடுகளாக உள்ளன. ஜேர்மனி, ஜப்பான், பிரான்ஸ் இவ்வாறு தமது தாய்மொழியில் முன்னேறியுள்ளன.

இவ்வாறு மட்டக்களப்பு தமிழ்ச்சங்க புனரமைப்புக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மௌனகுருசாமி தெரிவித்துள்ளார்.

மொழியின் வளர்ச்சிக்கு அரசியல், பொருளாதாரக் காரணிகள் ஏதுவாக உள்ளன. இந்தியாவின் பின்னடைவுக்குக் காரணம் அங்கு இரண்டு மொழிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளமையாகும்.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கம் சுவாமி விபுலானந்தரால் ஆரம்பிக்கப்பட்டது. 1956ம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட இன மோதல்களையடுத்து அதன் வளர்ச்சி குன்றியது. 1983 இற்குப்பின் முற்றாகவே செயலிழந்தது. தமிழ்மொழி வளம் மிக்கது. சோழர் காலத்தில் தமிழ்மொழியானது இந்து சமுத்திரத்தில் வர்த்தக மொழியாக இருந்தது என்று அரசாங்க அதிபர் தமது உரையில் மேலும் தெரிவித்தார்.

## துணைவேந்தர்களுடன் சனாதிபதி சந்திப்பு

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களையும் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் சந்தித்து பல்கலைக்கழகங்களில் நிலவும் குறைபாடுகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ், கிழக்குப்பல்கலைக்கழக உபவேந்தர் எம்.எஸ்.மூக்கையா திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் உமாகுமாரசாமி உட்பட பலரும் கலந்து கொண்டனர். பல்கலைக்கழகங்களில் ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களைத் தேவை ஏற்படின் சேவையில் இணைத்துக் கொள்வது என்றும் இந்தச் சந்திப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## தபால் விநியோகத்தில் தனியார் வாகனங்கள்

### - அமைச்சரின் புதிய திட்டம்

தபால் விநியோக நடவடிக்கைகளில் தனியார் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு மக்கள் தொடர்பாடல் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது. நாடு பூராகவும் தபால்களை விநியோகிப்பதற்கு தனியார், அரசபோக்குவரத்து நிறுவனங்களுக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் பயன்படுத்தப்படும். பரீட்சார்த்த முயற்சியாக இத்திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது என அமைச்சு தெரிவிக்கிறது.

புதிய திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு பிரதேசத்திற்குமுரிய நில அமைப்புக்கு ஏற்றவாறு தபால் விநியோகக் கொள்கைகளை வடிவமைக்கும் அதிகாரம் உதவித் தபால் அதிபர்களுக்கு வழங்கப்படுகிறது.

## 31ஆம் நாள் நீங்காத நினைவில்...



தோற்றம் 01 04 1950

மறைவு 09 07 2003

அமரர்

### திரு.தனுஸ்கோடி சுப்பிரமணியம்

(இரத்தினம்)

உங்களின் ஆசை முகம் கண்டு
31 நாள் ஆகியும் இன்னும்
மறவாத உங்கள் நினைவோடு
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதி நிகழ்வில் நேரில் கலந்துகொண்டும், இரங்கல் செய்திகளை அனுப்பியும் எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றியறிதலை தெரிவிப்பதோடு 08.08.2003 இன்று எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

149/A பாண்டியன்குளம்
நட்டாங்கண்டல்.

(கி-8453)

தகவல்:-
மனைவி,பிள்ளைகள்.

# தொகுதி ரீதியான பாராளுமன்றக் குழுத் தலைவராக தினேஷ் குணவர்த்தன பிரதமரால் நியமனம்

**பொ.ஐ.முன்னணியின் ஐக்கியத்தைக் குலைக்கும் முயற்சியென ஆய்வாளர் கருத்து**

(கொழும்பு)

**தொகுதி ரீதியான பாராளுமன்றக் குழுத் தலைவராக எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவை ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.**

இந்தக் கமிட்டியின் தலைவருக்கு ஒரு அமைச்சரைவிட அதிகமான அதிகாரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது எதிர்க்கட்சியினருக்கு அதிக நன்மையளிக்கக் கூடியதாகஉள்ளது.

இந்த 14 கமிட்டிகள் ஏற்படுத்துவதில் அரசாங்கத்தில் நடக்கும் குறைபாடுகள், மோசடிகளைப் பற்றிப் பொது மக்களுக்கு அறிவிக்கக்கூடிய வாய்ப்பு எதிர்க்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது. தொகுதி ரீதியான தேர்தல் முறையை மீண்டும் கொண்டுவருவது தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவைத் தலைவராக நியமித்திருப்பதை நாங்கள் வரவேற்கின்றோம். இந்தச் சம்பவத்தை எதிர்க்கட்சியினர் தவறவிட்டுவிட்டால் அதற்கு வரும் நல்லதொரு சந்தர்ப்பத்தை இழக்கப் போகிறதென பொதுசன ஐக்கிய முன்னணி கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பர்னாண்டோபுள்ளே கூறியுள்ளார். தற்பொழுது பாராளுமன்றத்தில் அரசாங்கத்தைப் பற்றி விமர்சிப்பது, பொய்ப் பிரச்சாரங்கள் செய்வது எதிர்க் கட்சியினருக்கு எவ்வித நன்மைகளையும் ஏற்படுத்தாது. இதனால் எதிர்க்கட்சி பாராளுமன்றத்தில் எதையும் சாதிக்கமுடியாது. எதிர்க்கட்சியினர் தலைவர் பதவியை ஏற்பதால், அரசாங்கத்தின் ஊழல்களையும், மற்றும் கூட்டு ஸ்தாபனங்கள், அரச திணைக்களத்தில் நடக்கும் மோசடிகளைப் பற்றி மக்களுக்கு அறிவிப்பதற்கு எதிர்க்கட்சியினருக்கு நல்லதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டால் சில வேளைகளில் அரசுக்கு நன்மைகள் இதில ஏற்படாவிட்டால் எதிர்க்கட்சிக்குப் பாதிப்புக்களை உண்டு பண்ணும் என எதிர்க்கட்சிகள் நம்ப வேண்டாம். பொது மனஸ்தாபங்களை மறந்து சகலரும் இதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள்.

அரசியல் நடவடிக்கைகளில் அரசு எதிர்க்கட்சியினரையும் சேர்த்துக்கொண்டிருப்பதன் மூலம் நம் நாட்டின் சனநாயகத்திற்குச் சிறப்பான எதிர்காலம் உண்டு என நான் திடமாக நம்புகிறேன் என ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனவை இக் குழுவின் தலைவராக நியமித்ததன் மூலம் எதிர்க்கட்சியான பொதுசன ஐக்கிய முன்னணியின் ஐக்கியத்தைக் குலைக்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தினேஷ் குணவர்த்தனவின் நியமனத்தைப் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் பேராசிரியர் விக்கிரமபாகு கருணாரத்ன வரவேற்றுள்ளார்.

## ஊ.தே.எ.பேரவை தெரிவு

கல்விளான் ஊரக தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவு கடந்த செவ்வாய்க்கிழமை கல்விளான கிராமசேவையாளர் செயலகத்தில கிராமசேவையாளர் ச.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து ஊரக தேசிய எழுச்சிப் பேரவை தொடர்பான கருத்துக்களைத் துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் போராளி நா.இசைப்பிரியன் அவர்களும், பெ.தனமஐயா அவர்களும் வழங்கினார்கள். இதனையடுத்து ஊரக தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவு இடம்பெற்றது.

# 17 படையினருக்கு பிணை வழங்க அனுமதி

(வடமராட்சி)

2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதப் பகுதியில் முகமாலை முன்னரங்கப் பகுதியில் கடமை நேரத்தில் சிப்பாய் ஒருவர் பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 17 படைச் சிப்பாய்களையும் பிணையில் விடுவிப்பதற்குக் கொழும்பு உயர் நீதிமன்று அனுமதித்துள்ளது.

2002 ஆம் ஆண்டு டிசம்பர் 23 ஆம் திகதி கடமையில் இருந்த வேளை பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்டு கெமுனு படைப் பிரிவைச் சேர்ந்த ரத்நாயக்கா என்ற சிப்பாய் உயிரிழந்திருந்தார்.

இவரது கொலைச் சம்பவம் தொடர்பில் அவருடன் அன்றைய தினம் கடமையில் இருந்த 17 படைச் சிப்பாய்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

சுமார் 8 மாத காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் தம்மைப் பிணையில் விடுவிக்கக் கோரி கொழும்பு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவின் பிரகாரம் அவர்களைப் பிணையில் விடுவிப்பதற்கான அனுமதியைக் கொழும்பு உயர் நீதிமன்றம் சாவகச்சேரி நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது. தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையிலும் அதில் ஒருவர் அரச பணியாளராக இருக்க வேண்டும், அல்லது ரூபா ஐம்பதாயிரம் காசுப்பிணை மற்றும் இரு ஆள் பிணைகளில் இவர்களைச் செல்வதற்கு சாவகச்சேரி நீதிமன்று அனுமதித்ததை அடுத்து நேற்று முன்தினம் தென்னிலங்கையில் இருந்து வந்திருந்த அவர்களது உறவினர்கள் இவர்களில் 13 பேரைப் பிணையில் மீட்டுச் சென்றுள்ளனர்.

ஆயினும் நால்வருக்கான பிணைதாரர்கள் ஆஜராகாத நிலையில் அவர்கள் தொடர்ந்தும் யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (27)

# கண்ணிவெடியில் சிக்கி சரசாலையில் மூவர் காயம்

(வடமராட்சி)

தென்மராட்சி வடக்கு சரசாலைப் பகுதியில் இடம்பெற்ற நிலக் கண்ணிவெடிச் சம்பவமொன்றில் பொதுமக்கள் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

அதே இடத்தைச் சேர்ந்த சிசகாயநாதன்(வயது-45) மற்றும் பரராசசிங்கம் (வயது-57) தெய்வேந்திரம் (வயது-44) ஆகிய மூவருமே காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் குறித்த பகுதியில் உள்ள காணியில் நின்ற வேப்பமரம் ஒன்றை இவர்கள் தறிக்க முற்பட்டபோது மரத்தின் கீழ் புதையுண்டிருந்த குண்டு வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் அங்கு நின்ற மற்றுமொரு பொதுமகன் காயம் எதுவும் இன்றி மயிரிழையில் தப்பியுள்ளார்.

காயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த பகுதியில் 2000ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இராணுவத்தினரால் புதைக்கப்பட்டிருந்த வெடிபொருளே வெடித்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. (27)

# ஐரோப்பிய சமூகத்தின் 1 வது அரசியல் யாப்பு டென்மார்க்கில் வாக்கெடுப்பிற்கு விடப்படும்

ஐரோப்பிய சமூகத்தின் முதலாவது அரசியல் யாப்பை ஏற்றுக் கொள்வது சம்பந்தமான மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு டென்மார்க்கில் அடுத்த வருடம் நடைபெறும் என்று அந்த நாட்டின் பிரதமர் ரக்ஸ் மோசன் தெரிவித்துள்ளார்.

1992 ஆம் ஆண்டில் அட்போதைய ஒப்பந்தத்தை கருத்துக் கணிப்பு மூலம் டென்மார்க் நிராகரித்திருந்தது.

அதேசமயம் 2000 ஆம் ஆண்டில் யூரோ நாணயத்தை ஏற்றுக் கொள்வதில்லை என அபிப்பிராய வாக்கெடுப்பில் டென்மார்க் மக்கள் நிராகரித்திருந்தனர்.

புதிய ஐரோப்பிய சமூக அரசியல் யாப்புச் சம்பந்தமாக இன்னும் 12 மாத காலத்தினுள் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறுமெனப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

# 6 கோடியே 40 இலட்சம் மக்கள் வாழும் எதியோப்பியாவில் மீண்டும் கடும் பஞ்சம்

எதியோப்பிய மக்கள் பட்டினியால் மீண்டும் கடும் கஸ்ரங்களை எதிர் நோக்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

ஆறு கோடியே 40 இலட்சம் மக்கள் வாழும் எதியோப்பியாவில் 20 வருடங்களுக்கு முன்னரும் இந்த நிலை ஏற்பட்டிருந்தது.

இருந்த போதும் எந்தவித அபிவிருத்தியும் ஏற்படாத காரணத்தினால் வெளிநாடுகளின் உதவியிலேயே எதியோப்பியா இருந்து வருகின்றது.

அமெரிக்கா, ஐரோப்பிய சமூகமும், ஏனைய உதவி வழங்கும் நாடுகள் என்பன தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் உணவுப் பொருட்களை அனுப்பவும், நிதியுதவியை வழங்கவும் முன்வந்துள்ளன.

அமெரிக்கா மாத்திரம் 50 கோடி டொலர்கள் பெறுமதியான உணவுப் பொருட்களை வழங்க முன்வந்துள்ளது.

கெயார் ஸ்தாபனத்தின் நிவாரணக் குழுவின் தலைவரான பீற்றர்பில் தகவல் தருகையில்,

எதியோப்பியாவின் இத்தகைய நிலைமைக்குத் தீர்வு காணும் வகையில் வழங்கப்படும் இந்த உதவிகள் அந்த நாட்டின் கஸ்ரங்களை ஒருபகுதி மாத்திரம் நிவாரணம் பெற உதவும் என்று கூறியுள்ளார்.

அங்குள்ள நிலைமை பற்றி ஆராய்வதற்கென அமெரிக்கா தூதுக்குழுவொன்றை இந்த வாரம் அனுப்பவுள்ளது.

இதேபோல் இந்தியா 2000 தொன் கோதுமை, அரிசியும்,50000 அமெரிக்க டொலர் மதிப்புள்ள எச்.ஐ.வி. மருந்துகள் வழங்கியதுடன் 50 இலட்சம் அமெரிக்க டொலர்கள் சலுகைக் கடனாகவும் வழங்கியுள்ளது.

# பதவியைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேற லைபீரிய சனாதிபதி முடிவு

(லண்டன்)

தென்னாபிரிக்க சனாதிபதி எதிர் வரும் திங்கட்கிழமை லைபீரியாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

லைபீரிய சனாதிபதி சாள்ஸ் டெயிலரின் அதிகாரங்களைக் கையளிக்கும் நிகழ்வில் இவர் கலந்து கொள்ளவுள்ளார்.

மேற்காபிரிக்க அபிவிருத்தி வலய அமைப்பின் தலைவர் கானா சனாதிபதி ஜோன் ஹெவ்பரும் இதில் கலந்து கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

லைபீரிய சனாதிபதி தனது பதவியை உதவி சனாதிபதி மோசேஸ்லாவிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும், அதன் பின்னர் அவர் அன்றைய தினம் அல்லது மறுநாள் நாட்டைவிட்டு வெளியேறவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# காட்டுத் தீயினால் சுரங்கப் பாதையில் சிக்கிய 30 பேர் மீட்பு

## -ஸ்பெயினில் சம்பவம்

ஸ்பெயினில் பரவும் காட்டுத் தீ காரணமாகப் புகையிரத சுரங்கப் பாதை ஒன்றில் சிக்கியிருந்த 30 ற்கு மேற்பட்ட புகையிரதத் திணைக்கள ஊழியர்களை அவசர பாதுகாப்புப் படையினர் மீட்டுள்ளனர்.

புதிதாக அமைக்கப்படும் புகையிரத சுரங்கப் பாதையொன்றில் இவர்கள் சுமார் 4 மணி நேரம் வெளியேற முடியாமல் சிக்கி இருந்தனர்.

இவர்களைக் காப்பாற்றப் பயன்படுத்திய வாகனத்தில் தீ பரவிய போதும் இவர்களுக்குக் கடும் காயம் எதுவும் ஏற்படவில்லையென ஸ்பெயின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

# சதாம் ஹுசைனின் சொந்த ஊரில் அமெ.படை சுற்றிவளைத்துத் தேடுதல்

## -மூவர் கைது

(பாக்தாத்)

ஈராக்கில் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனின் சொந்த ஊரான திக்ரித்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட திடீர் சோதனையின் போது 03 முக்கிய சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாக அமெரிக்க இராணுவம் கூறியுள்ளது.

நகரத்தின் சகல வீதிகளும் மூடப்பட்டுச் சுற்றிவளைக்கப்பட்டு நடத்தப்பட்ட சோதனையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இவர்கள் ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தினர் மீது தாக்குதலை நடத்தியுள்ளதுடன், பல தாக்குதல்களுக்குத் திட்டங்களை வகுத்துள்ளதாகவும் அடையாளம் தெரியவந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஆறு மாதங்களில் சிறிலங்காவில் 1778 புதிய கம்பனிகள் பதிவு

(கொழும்பு)

இவ்வருடம் முதல் ஆறு மாதங்களில் இலங்கையில் புதிய கம்பனிகளைப் பதிவு செய்வது கணிசமாக அதிகரித்துள்ளதாக கம்பனிப் பதிவாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஆறு மாதகாலப் பகுதியில் மட்டும் 1778 உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கம்பனிகள் பதிவு செய்யப்பட்டன. கடந்த வருடத்தைவிட இது 35 சதவிகித அதிகரிப்பு என்றும் கம்பனிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

# ஐ.நா.இல் அங்கத்துவம் பெற தாய்வான் மீண்டும் விண்ணப்பம்

(தாய்பேய்)

ஐ.நா.சபையில் அங்கத்துவம் பெறவெனத் தாய்வான் மீண்டுமொருமுறை முயற்சித்துள்ளது.

1993 ஆம் ஆண்டிலிருந்து ஐ.நா.சபை அங்கத்துவத்திற்குத் தாய்வான் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதும், ஒவ்வொரு தடவையும் சீனா அதனைத் தடை செய்திருந்தது.

இதற்கிடையில் தாய்வானின் அங்கத்துவப் பிரேரணைக்கு 15 நாடுகள் பரிந்துரை ஒன்றை கோபி அனானிடம் கையளித்துள்ளன.

ஐ.நா.பொதுச்சபையில் 19 ஆவது கூட்டத் தொடர் செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி ஆரம்பிக்கும் போது தாய்வானின் விண்ணப்பமும் ஆராயப்படும்.

2 கோடியே 30 இலட்சம் மக்கள் வாழும் தாய்வான், பெல்ஜியத்திலும் பார்க்கப் பெரிய தேசமாகும். உலகின் உன்னதமான பொருளாதாரத்தைக் கொண்டுள்ள நாடுகளில் தாய்வானும் ஒன்றாக இருந்து வருகின்றது.

# பாக்தாத்தில் ஜோர்தானிய தூதரகத்திற்கு வெளியே கார்க்குண்டு வெடித்தது

## 12 பேர் பலி; 50 பேர் காயம்

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்திலுள்ள ஜோர்தானிய தூதரகத்திற்கு வெளியே வெடிகுண்டுகள் வைக்கப்பட்ட காரொன்று வெடித்துச் சிதறியதில் 12 பேர் வரை கொல்லப்பட்டனர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

தூதரகத்திற்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த அந்தக் கார் மீது ஏவுகணையால் தாக்கப்பட்டதாகவும் அதன் விளைவாகக் காரிலிருந்த வெடிகுண்டுகள் வெடித்தன எனத் தாங்கள் நம்புவதாகவும் ஜோர்தானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இறந்தவர்கள் அனைவரும் ஈராக்கியர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈராக்கின் கராடா மாவட்டத்தில் அமெரிக்கப் படையினர் சென்று கொண்டிருந்த வாகனம் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் இரு படையினர் காயமடைந்தனர். மேலும் பிறிதொரு மாவட்டத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தாக்குதலில் இரு அமெரிக்கப் படையினர் காயமடை



# வட – கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பற்றி சட்டமா அதிபருடன் ஆலோசனை

## உதவித்தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தலை எந்தமுறையில் நடத்துவது என்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்ற பின்னர் தீர்மானிக்கப்படும் என உதவித் தேர்தல் ஆணையாளர் அருந்தவச்செல்வன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அடுத்த வருடம் ஏழு மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவுறும் கால எல்லைக்கு ஏற்ப அந்த சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் என உதவித் தேர்தல் ஆணையாளர் அருந்தவச் செல்வன் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க சனவரியில் நடைபெறவுள்ள வடக்கு-கிழக்கு உள்ளூராட்சி மன்ற தேர்தல்களுக்கான ஏற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# உடையார்கட்டு விபத்தில் வாகனம் கடைக்குள் புகுந்தது

## மூவர் படுகாயம்

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்பு நோக்கிச்சென்ற ஹை- ஏஸ் வாகனமும் துவிச்சக்கரவண்டியும் உடையார்கட்டுப் பகுதியில் விபத்துக்குள்ளாகின. இதில் மூவர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 9.15 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வாணிப நிலையம் ஒன்றினுள் புகுந்தது. அதனால் கப்பு ஒன்று உடைந்ததால் வாகனத்தின் மேல் வாணிப நிலையத்தின் ஒரு பகுதி பொறிந்து இருந்ததைக் காண முடிந்தது.

வாணிப நிலையம் மூடப்பட்டிருந்ததால் எவரும் இதில் பாதிப்படையவில்லை.

இவ் விபத்தில் காயமடைந்த மூவரும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (19)

### - மட்டு. ஊரணியில்

# பேருந்து -உந்துருளி விபத்தில் மூன்று பிள்ளைகளின் தாய் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஊரணிச்சந்தியில் நேற்று இடம்பெற்ற தனியார் பேருந்து, உந்துருளி விபத்தில் ஆசிரியை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிரானைச்சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான ரி.யோகமலர் (வயது-34) என்பவரே உயிரிழந்தவராவார். தனது கணவருடன் உந்துருளியில் பிரயாணம் செய்த வேளையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இவரின் கணவர் காயங்கள் எதுவுமின்றி உயிர் தப்பியுள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பாக பேருந்து சாரதி மட்டக்களப்பு பொலிசாரினால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

### - மட்டு. புளியந்தீவு -

# தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலக அருகில் கைக்குண்டுவீச்சு

மட்டக்களப்பு புளியந்தீவில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இரவு 8.20 மணியளவிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் புனர்வாழ்வுக்கழகத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்று சேதமடைந்துள்ளதாக தெரிய வருகிறது. கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடும் அமைப்பு ஒன்றின் வாகனமே சேதமடைந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே கைக்குண்டை வீசி தாக்குதல் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

### இராணுவத்தின்...

அமைந்துள்ள இராணுவ முகாமை அண்டியுள்ள காணிப்பகுதியில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள் ளது.

மேற்படி பகுதியில் மிதிவெடிகள் உள்ளதான எந்தவித எச்சரிக்கையும் இடப்படவில்லையெனத் தெரி விக்கப்படுகிறது.(33)

### வடமராட்சி...

திருகோணம்குமார் (வயது-22), திருகோணம் பாலமுருகன் (வயது-29) மற்றும் தங்கப்பன் சுந்தரவேல் (வயது-23) வைத்திநாதன் சுரேஸ் (வயது-22), மாணிக்கவேல் சுரேந்திரன் (வயது-18) தங் கப்பன் மகேந்திரன் (வயது-33), மாணிக்கவேல் வீரமணி (வயது-36) ஆகிய பத்து பேருமே பிடிக்கப் பட்டவர்களாவர்.

இது தொடர்பான செய்திகள் வெளியாகியதை அடுத்து நள்ளிரவு ஒரு மணியளவில் சர்வதேச கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் அங்கு சமுகமளித்திருந்தனர். இதேவேளை படையினரும் பெருமளவு பொலிசாரும் அப்பகுதியில் குவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்ட இந்திய மீனவர்களை விடுதலை செய்யுமாறு தெரிவித்துள்ளனர்.

இதற்கு மீனவ சங்கப் பிரதிநிதிகள் மறுப்புத் தெரிவித்தநிலையில் நேற்றுக்காலை இவர்களை விடுவிப்பது தொடர்பான பேச்சுக்கள் தொடர்ந்தன.

மனித உரிமை ஆணைக்குழுவின் அமைப்பாளர் சர்வதேச கண்காணிப்புக்குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதிகள் பருத்தித்துறைப் பிரதேச செயலர் மற்றும் மீன்பிடித்துறை அமைச்சின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் மற்றும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த இமயவன் உள்ளிட்ட பலர் மீனவர்களின் விடுதலை தொடர்பாக பேச்சுக்களை நடத்தினர்.

இலங்கைக்கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் இந்திய மீன்பிடிப்படகுகளைக் கட்டுப்படுத்தக்கோரி தாங்கள் கோரிக்கைகளை விடுத்திருந்தபோதும், இக்கோரிக்கைகள் தொடர்பாக எவருமே ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் நேற்றையதினம் பலலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் இந்திய மீனவர்களினால் களவாடப்பட்டதாகக் கூறியதுடன் இந்நிலையிலேயே இவர்களைப்பிடித்து வந்ததாகவும் தங்களுக்கு உறுதியான முடிவு ஒன்றை வழங்காத வரை இவர்களை விடுதலை செய்ய மாட்டோம் என்று அந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட படையதிகாரிகள் இந்திய மீனவர்களை கடற்பரப்பில் வைத்துக் கைது செய்வதற்கான அனுமதி இலங்கை மீனவர்களுக்கு இல்லை எனவும் அவர்களையும் அவர்களது இரு படகுகளையும் தம்மிடம் கையளிக்குமாறு தெரிவித்தனர்.

இந்நிலையில் தொடர்ச்சியாக இடம்பெற்ற பேச்சுக்களின் பிரகாரம் இந்திய மீனவர்கள் பத்துப் பேரையும் அப்பகுதிக் கிராமசேவையாளர் ஊடாக பருத்தித்துறை பொலிசாரிடம் ஒப்படைக்க ஒத்துக்கொண்ட மீனவர்கள் அவர்களது மீன்பிடி இழுவைப்படகுகளை மீளளிக்க மறுப்புத் தெரிவித்தனர்.

ஆயினும் கடற்படையினர் இம் மீன்பிடி இழுவைப்படகுகளை காங்கேசன்துறை கடற்படைத் தளத்திலேயே நிறுத்தி வைக்க முடியும் எனத் தெரிவித்த போது மீனவர்களின் பலத்த எதிர்ப்பினால் அதனை இன்பருட்டிப்பகுதியில் உள்ள கரையோரக் காவல் படை அனுசரணையுடன் அவர்களது கண்காணிப்பின் கீழ் மீனவ சங்கம் தொடர்ந்து தடுத்து வைத்திருக்க அனுமதிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, அங்கு கலந்துகொண்ட மீனவர் சங்கங்களின் சமாசச்செயலாளர் கதுரியகுமார் மேற்படி கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் சட்டப்பாடு சிறிலங்கா கடற்படையிடம் உள்ளதாகவும் ஆயினும் சிறிலங்காக்கடற்படை இவ்விடயத்தில் அக்கறை அற்று செயல்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்த கடற்படை அதிகாரி தமக்கு போதிய ரோந்துப் படகுகள் இல்லாது இருப்பதாகவும் தாங்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறல் களை பார்த்திரும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்றும் சிறிலங்கா அரசு பாரிய நிதி நெருக்கடியில் சிக்கியிருப்பதாகவும் இதனால் உடனடியாக கடற்படைக்கு அதி வேக ரோந்துப் படகுகளை கொள்வனவு செய்து வழங்க முடியாது இருப்பதாகவும், ஆயினும் விரைவில் நடவடிக்கைகளை அதிகரித்து இந்திய மீனவர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மீனவர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் மீனவர்களையும் பொதுமக்களையும் தாக்குவதற்கு போதிய வலுவைக் கொண்டிருந்த கடற்படையினர் தற்போது மட்டும் இந்திய மீனவர்கள் விடயத்தில் வலுவற்றிருப்பதாகக் குற்றம் சாட்டினர். அத்துடன் கடற்படையினர் இந்திய மீனவர்களிடமும் மீன்களைப்பெற்றுக் கொள்வதாலேயே எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது உள்ளதாகத் தெரிவித்தனர்.

இந்நிலையில் மீனவர்களின் எதிர்ப்பை அடுத்து மேற்படி கடற்பரப்பில் கடற்படையின் ரோந்து நடவடிக்கையை அதிகரிப்பது என சம்மதம் தெரிவித்த கடற்படை அதிகாரி மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் தூதுவராலய அதிகாரிகளை அரசினூடாக குடாநாட்டுக்குள் அழைத்து வந்து மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுகளை நடத்துவது எனவும் அல்லாவிடின் யாழில் இருந்து மீனவர் சங்கப்பிரதிநிதிகளை கொழும்புக்கு அழைத்துச்சென்று இந்திய தூதுவராலய அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தி சுமுகமான தீர்வுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இதனை அடுத்து பிடிக்கப்பட்ட மீனவர்கள் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.(27,33)

### 10000 பேரை...

வழங்கப்படும் குறைந்தளவு ஊதியமே படையில் சேர இளைஞர்கள் முன்வராமைக்கும் படையில் இருந்து தப்பி ஓடுவதற்கும் காரணம் என முப்படைகளினதும் தளபதிகள் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவிடம் தெரிவித்ததை அடுத்து இது குறித்து சிறிலங்காப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரைவில் கவனம் செலுத்தவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### திட்ட...

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2001ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னர் இடம்பெற்ற வன்முறைகள் காரணமாக பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் சுமார் ஐம்பது பேர் கொல்லப்பட்டதாகவும் மூவாயிரம் பேர் வரை உடல் உளரீதியாக பாதிப்புக்குள்ளாக்கப் பட்டதாகவும் சனாதிபதி இந்தச் சந்திப்பின் போது பிரதமரிடம் நினைவுபடுத்தினார்.

இவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளபோதிலும் இதுவரை அனுகூலமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் சனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

### அடுத்த...

வில்லை என அவர் கூறினார். எவ்வாறாயினும் எந்தவொரு தேர்தல் நடைபெற்றாலும் அதில் தமது கட்சி வெற்றி பெறுவது நிச்சயம் என அவர் கூறினார்.

இதேவேளை, மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பதாக தேர்தலில் போட்டியிடும் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக விசேட செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக பொதுசன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரத்னவிடம் கேட்ட போது அவ்வாறான செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதை உறுதி செய்தார்.

### அரசு...

ஜீ.எல்.பீரிஸ் விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு இணங்க வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கான இடைக்கால நிர்வாகத்தினை உருவாக்குவது குறித்து சிறிலங்கா அரசு அனுப்பி வைத்த திட்டத்தை விடுதலைப்புலிகள் பரிசீலித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த ஆலோசனைக்குப் பின்னர் இருதரப்பினருக்கும் இடையே அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் சாத்தியம் அதிகரித்துள்ளது என்றும் நோர்வே அரசின் அனுசரணையுடன் டிசம்பர் மாதம் ஆரம்பமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

### இடைக்கால...

களிடம் வழங்குவதாகவும் நாட்டின் இறைமையை பாதுக்காக்க அனைத்து மக்களையும் முன்வருமாறு கோரிதுண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இடைக்கால அரசை விடுதலைப்புலிகளிடம் வழங்க வேண்டாம் எனவும் வெளிநாட்டுப் படைகளை உள்ளே விடவேண்டாம் என்றும் இரண்டு கோரிக்கைகளை ஜே.வி.பி முன்வைத்துள்ளது. இதற்கு பதிலளித்த ஐ.தே. முன்னணி பிரமுகர் ஒருவர் இடைக்கால நிர்வாகம் குறித்த இறுதி முடிவுகள் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என்றும் எந்தவொரு வெளிநாட்டுப்படைகளையும் நாட்டுக்குள் அனுமதிக்கும் எண்ணம் தமது அரசுக்கு இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## துயர் பகிர்கின்றோம்

ஒட்டுசுட்டான்பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் செல்வி இராஜசிங்கம் றஜிதா அவர்களின் அம்மம்மாவான

**சுப்பிரமணியம் சரஸ்வதி**

அவர்கள் 03.08.2003 ஆம் திகதி தும்பளை, பருத்தித்துறையில் காலமாகியதையொட்டி துயருறும் சக உத்தியோகத் தருக்கும் குடும்பத்தினரிற்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர்.
நலன்புரிச் சங்கம்.

(3617)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.